SEP - 2023

# THE JEWEL

*Bulletin of*

## LIONS CLUB OF SIVAKASI

Vol : 3



**Editor** : Lion Deepa Lakshmi Sudhakaran
**Address** : 641, Gnanagiri Road, Sivakasi.
**Phone** : 94875 91369
**Email** : editor.lionsclubofsivakasi@gmail.com



**Lion K.Prabakar**
*President*
98949 95884
president@lionsclubofsivakasi.com



**Lion P.Nithyapandi**
*Secretary*
94431 69876
secretary@lionsclubofsivakasi.com



**Lion P.Sudhakaran**
*Treasurer*
94433 31369
treasurer@lionsclubofsivakasi.com

### Associate Editors 2023 - 24



**Lion**
**MJF P.Vinoth Kanna**



**Lion**
**M.Raddhikadevi**



**Lion**
**S.Bhavani**



**Lion**
**Amirtha Priya**

**Slogan : Deserve, Fight for Right**

**Theme : Touch the Heart by Service**

# Lions Club of Sivakasi Surpassing 62nd Year 1961 - 2023

| | | |
|---|---|---|
| Multiple District | : | **324** |
| District | : | **324 A** |
| Region | : | **Raja Rajan** |
| Zone | : | **Vilvam** |
| Club No | : | **26504** |
| Inaugurated on | : | **09-05-1961** |
| Charterd on | : | **19-05-1961** |
| Total Members | : | **223** |
| Charter Member | : | **1** |
| MJFs & PMJFs | : | **28 & 3** |
| Meeting Days | : | I, II, IV Wednesday |
| Meeting Venue | : | Sivakasi Lions Junior School Palaniandavarpuram Colony, Sivakasi. |
| Permanent Project | : | **The Sivakasi Lions Mat.School, Sivakasi. Bus Shelters, Children's Park, Blood Separation Unit, Blood Storage D.Freezer, ICU Ward & Washing Plant at Sivakasi G.H., Library and sewing machine centre in Burma Colony.** |

# Table of Contents


- PST's Report 4
- Editor Report 11
- Global Lions Activities 12
  (Dr.Patti Hill Message, Service of Pride, District News)
- Cover Story - Junior School Excellence 15
- Our Clubs Activities 18
  (Ist and IInd General Body Meeting, Inter District, Inter Club Meeting with Erode Supreme Club)
- Bulletin Month Celebration 29
- Our Club Teachers Perspective 39
- Unveiling Schools Report 43
- Added Value Contents 46
  (Organisation and History of Lions Club, Process of Changing your IDENTITY, மூத்த குடிமக்களும், அரிமா சங்கமும், Birthday Wishes, வாழ்த்துரை)

# தலைவர் உரை



அனைவருக்கும் வணக்கங்கள். எங்களது Team பதவியேற்று 3 மாதங்கள் நிறைவு பெற்று விட்டது. இந்த 3 மாதங்களில் பல்வேறு சேவை திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், பல்வேறு புதிய நட்புகளை உருவாக்கிக் கொள்வதற்கும், தலைமை பண்பை வளர்த்துக் கொள்வதற்கும், எங்களுக்கு மிகச்சிறந்த வாய்ப்பாக அமைந்தது. இந்த வாய்ப்பை வழங்கிய நமது அரிமா சங்கத்திற்கு எங்களது நன்றிகள்.

செப்டம்பர் 7-ஆம் தேதி Lions Club of Erode Supreme-வுடன் நடந்த கூட்டுக் கூட்டம் மிகவும் சிறப்பாக இருந்தது. இரு சங்கங்களும் சங்க நடைமுறைகளை பரிமாறிக் கொள்வதற்கும், நட்பை பெருக்கிக் கொள்வதற்கும், திறமைகளை வெளிக் கொண்டு வருவதற்கும் இந்த கூட்டம் மிகப்பெரிய வாய்ப்பாக இருந்தது.

அவர்கள் நடத்தி வரும் Blood Bank உலகத்தரம் வாய்ந்ததாக இருந்தது. நாமும் அடுத்த நிரந்தர திட்டத்தை பற்றி யோசிக்க வேண்டிய காலம் வந்து விட்டது என்று நான் நினைக்கிறேன்.

Attendance Committee ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்பும் Phone மூலம் நினைவுப்படுத்தியும் எதிர்பார்த்தபடி attendance இல்லை. இளைஞர்கள் நிறைய பேர் நமது சங்கத்தில் இருக்கின்றார்கள். அனைவரும் திரளாக நமது கூட்டத்தில் பங்கேற்றால் எங்களுக்கு மேலும் உற்சாகமாக இருக்கும். அனைவரும் ஆர்வமாக பங்கேற்க சங்க கூட்டத்தில் மேலும் சில சுவாரஸ்யமான நிகழ்வுகளை கொண்டு வர திட்ட மிட்டுள்ளோம். நாம் அனைவரும் நன்கு இணைந்து செயல்படுத்துவோமாக.

நன்றி! வணக்கம்.

**Lion K.Prabakar**
*President*

# செயலாளர் அறிக்கை

*Lion P.Nithyapandi*



அனைவருக்கும் வணக்கம்.

ஆகஸ்ட் 16 முதல் செப்டம்பர் 15 வரை நமது சங்கத்தின் செயல்பாடுகளும், சேவைகளும் மிகவும் சிறப்பாக நடந்தது. அதில் பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- 23.08.23 அன்று ஆகஸ்ட் மாதத்தின் இரண்டாவது பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது, இதில் சிறப்பு விருந்தினராக PDG லயன் Dr. ஆதிலட்சுமி குருமூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு "History and structure of Lion's International" பற்றி உரையாற்றினார்கள்.
- 27.08.23 நமது மண்டல அளவிலான தலைமைப் பண்பு மேம்படுத்துதல் கருத்தரங்கம் நடைபெற்றது.
- 06.09.23 நமது சங்கத்தின் மூன்றாவது செயற்குழு கூட்டம் நடைபெற்றது.
- 07.09.23 அன்று 324 கூட்டு மாவட்ட சங்க கூட்டம் ஈரோடு சுப்ரீம் சங்கத்துடன் நடந்தது. நமது சங்கத்தில் இருந்து 17 உறுப்பினர்கள் கலந்து கொண்டோம். 7.09.23 அன்று கொடுமுடி கோயிலையும், 8.09.23 அன்று திண்டல் முருகன் கோயில் மற்றும் பவானி சங்கமேஸ்வரர் கோயிலை தரிசனம் செய்தோம்.
- 11.09.23 அன்று கோவில்பட்டியில் நடைபெற்ற சிறப்பு மாவட்ட மாநாட்டில் நமது சங்கத்தில் இருந்து 22 உறுப்பினர்கள் கலந்து கொண்டோம்.
- 13.09.23 அன்று செப்டம்பர் மாத முதல் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் ஆசிரியர் தினக்கொண்டாட்டம் நடைபெற்றது. லயன்ஸ் பள்ளியின் 130 ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சிறப்பு விருந்தினராக திரு. அண்ணாமலையான் அவர்கள் (S.H.N.Girls School Correspondent) கலந்து கொண்டு A Journey of Impact :Teachers Day Tribute பற்றி உரையாற்றினார்.

# நமது சேவை திட்டங்கள்

**பசிக்கு உணவு :** நமது முன்னாள் தலைவர் MJF லயன் S.வாசியப்பன் அவர்களால் 17.08.2023 முதல் பசிக்கு உணவு திட்டம், சிவகாசி, பைபாஸ் ரோடு, மேகலா பல் மருத்துவமனையில் வைத்து தொடங்கப்பட்டது. தினமும் 10 நபர்களுக்கு மதியம் 12.30 மணிக்கு உணவு வழங்கப்படுகிறது.

ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்

**அரசு மருத்துவமனைக்கு A/c** : 17.08.23 அன்று MJF லயன் A.P. செல்வராஜ் அவர்கள், சிவகாசி அரசு பொது மருத்துவமனையில் உள்ள தீக்காய சிகிச்சை பிரிவிற்கு நான்கு A/c மெஷின்களும், டயாலசிஸ் பிரிவிற்கு இரண்டு A/c மெஷின்களும் வழங்கினார்கள். இது நோயாளிகளின் வசதியை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் உயிர்களைக் காப்பாற்ற அயராது உழைக்கும் சுகாதார நிபுணர்களுக்கும் மிகவும் உகந்த சூழலை உருவாக்கியுள்ளது.

**முதியோருக்கு உணவு** : லயன் R.C.P. ராஜீ அவர்களின் பிறந்த நாளன்று (18.08.2023) அன்று வள்ளலார் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு மதிய உணவு வழங்கினார். PMJF லயன் D.பிரபாகரன் அவர்களின் பிறந்த நாளை (19.08.2023) முன்னிட்டு அன்பு காப்பகத்தில் உள்ள முதியோர்களுக்கு மதிய உணவு வழங்கினார். இந்த வயதானவர்களுக்கு உணவளிக்கும் போது இவர்களின் பிறந்தநாள் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது.

**இரத்த தானம்** : 2.09.23 அன்று சிவகாசி காளீஸ்வரி கல்லூரியில் வைத்து இரத்ததான முகாம் நடைபெற்றது. 124 மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டார்கள். 07.09.23 அன்று I$^{st}$V.P.லயன் சுதிர் அவர்கள் இரத்த தானம் செய்தார்கள். இரத்த தானம் செய்யும் இவர்களின் தன்னலமற்ற செயல், தேவைப்படும் எண்ணற்ற நபர்களுக்கு நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக உள்ளது.

**நிதி உதவி** : 28.8.23 அன்று புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவனின் மருத்துவ செலவிற்கு ரூ.5,000/- சிறுவனின் பெற்றோரிடம் கொடுத்துள்ளோம். 23.8.23 அன்று அட்சயா என்ற மாணவிக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

**பலசரக்கு சாமான்கள் :** 5.09.23 அன்று ஜீவக்கல் ஆசிரமத்திற்கும், வெம்பக்கோட்டையில் உள்ள சிபியோ உண்டு உறைவிட பள்ளிக்கும் ஒரு மாதத்திற்குத் தேவையான அனைத்து பலசரக்கு சாமான்கள் வழங்கப்பட்டது.

15.9.23 அன்று ஜீவக்கல் ஆசிரமத்திற்குத் தேவையான முட்டை வழங்கப்பட்டது.

15.09.23 அன்று நமது சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் சார்பில் நம் ஸ்கூல் செக்யூரிட்டிக்கு அரிசி பை வழங்கப்பட்டது.

**Scanner:** 13.09.23 அன்று லயன் S.R.ஸ்ரீதர் அவர்கள் Sivakasi Institute of Printing Technology-க்கு ஒரு Scanner மெஷினை வழங்கினார்.


**மருத்துவ முகாம்கள் :** நமது சங்கம், சிவகாசி சுகாதாரத் துறையுடன் இணைந்து, வளர் இளம் பருவத்தினருக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள் 18.08.23 முதல் 15.09.23 வரை 9 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நடத்தினோம். இதில் மொத்தம் 1150 மாணவ, மாணவிகள் பங்கேற்றார்கள்.

இந்த முகாமில் பள்ளி மாணவர்களுக்கு இரத்த பரிசோதனை மற்றும் பொது உடல் சோதனை நடைபெறுகின்றது. இதில் Haemoglobin, Platelets, RBC, WBC போன்ற சோதனைகள் மேற்கொண்டு இரத்த சோகை உள்ளவர்களுக்கு சிறப்பு சிகிச்சை நமது அரசு மருத்துவமனையில் அளிக்கப்படுகிறது.

மேலும் இதில் பல் பரிசோதனையும் நடக்கின்றது. தேவைப்படுவோர்க்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, ஆரோக்கியத்தைக் காக்கும் வழிமுறைகள் கொண்ட Kit வழங்கப்படுகிறது. இந்த மருத்துவ முகாம்களால் பல மாணவர்கள் பயனடைகின்றார்கள்.

அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் பெரும்பாலும் குறைந்த வருமானம் பெறுபவர்கள், அந்த மாணவர்களால் பொது சுகாதாரப் பரிசோதனைக்குச் செல்ல முடியாது. இந்த மருத்துவ முகாம்கள் மாணவர்களுக்கு நேரடி சுகாதார சேவைகளை வழங்குகிறது. மேலும் ஆரம்ப நிலையில் உள்ள உடல் பிரச்சனைகளைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சையை வழங்க உதவுகிறது.

| நாள் | பள்ளி | பங்குபெற்ற மாணவர்கள் |
|---|---|---|
| 17.08.23 | சுக்கிரவார்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி | 118 |
| 21.08.23 | ஆனையூர் அரசு மேல்நிலைப்பள்ளி | 76 |
| 25.08.23 | அண்ணாவிதோட்டம் அரசு மேல்நிலைப்பள்ளி | 150 |
| 26.08.23 | அனுப்பன்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி | 166 |
| 1.09.23 | வீரமாமுனிவர் அரசு மேல்நிலைப்பள்ளி | 58 |
| 4.09.23 | ஆனைக்கூட்டம் அரசு மேல்நிலைப்பள்ளி | 167 |
| 8.09.23 | SHN பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளி | 85 |
| 11.09.23 | SHN பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளி | 187 |
| 15.09.23 | எரிச்சநத்தம் அரசு மேல்நிலைப்பள்ளி | 143 |



















*Touch the Heart by Service*






LIONS CLUB


LIONS CLUB
SIVAKASI






CLASS ROOM
LIONS CLUB


LIONS CLUB
SIVAKASI

# பொருளாளர் செய்தி

***Lion P.Sudhakaran***



அன்பு லயன்ஸ் உறுப்பினர்களுக்கு,

வணக்கம். சேவையை சீரிய முறையில் செயல்படுத்த எங்களுக்கு முழு ஒத்துழைப்பையும், ஈடுபாட்டினையும் அளித்து வரும் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி. நமது சங்கத்தில் சேவைகள் பல செய்திட தங்களது சந்தா தொகையையும், நன்கொடைகளையும் தாராளமாகத் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். இதுவரை 140 உறுப்பினர்கள் சந்தா தொகையை கொடுத்துள்ளார்கள். அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

---

**Our Club Service Report in MY LION APP Till Sep 15, 2023**

| People Served | Service Activities Completed | Volunteer Hours | Funds Donated (USD) | Funds Raised (USD) |
|---|---|---|---|---|
| 26.6K | 136 | 13.1K | $89.6K | $89.4K |





# Editor report

***Lion Deepa Lakshmi Sudhakaran***



Dear lions,

I am delighted to present the third issue of our magazine. This month we celebrate and recognise our Bulletin and past editors, for their vision, creativity and commitment which paved way for our magazines continuous success.

In this issue we have dedicated a section to the teachers and the past editors of our club, to express their invaluable role.It also covers the fellowship we create a with Erode Supreme Club. We highlighted the milestones and achievements of our Bulletin over the years.

Through our service we create a ripple effect of kindness and contribute to the well being of our community. Whether it's volunteering, lending a listening ear ,providing assistant in times of need or just some motivational words that uplift others.

I hope that the articles and features in this magazine have provided you with valuable insights and a deeper connection to our club.

**"Success is not the key to happiness.**

**Happiness is the key to success."**

If you love what you are doing you will be successful.

Thank you for your contributions and dedication. Wishing you all a successful month ahead.

# International President Message



**Dr.Patti Hill**

Believe in Yourself - To change the world, we first must believe change is possible.

Here are some key steps that can help you face the challenges ahead.

Be brave - In the causes you tackle and in the work that you do, don't shy away from something that may seem too difficult. You're up to the task and other Lions are here to support you. So take that bold first step.

Invest in the future - We all have a reason to invest in the future, and young people may be uniquely positioned to help us create change. We are better able to deal with the issues facing our communities when they're at the table with us. Let's invite the next generation of global leaders to serve with us as Lions.

Collaborate - We do our best work as a team. Work with community leaders, other service organizations, and each other to address the biggest problems facing your communities. Collaboration makes change happen faster.

Lead the way - Lions and Leos lead by example. We show the world what is possible when people care about their communities and when kindness is the goal. Lead the way, and others will join you.

Changing the World

Be the change.

# *Service of Pride*




**Sight for Kids :** Healthy eye sight is important to a child's academic performance, self-esteemed and overall well - being, but too often children don't have access to eye care. That's why in 2002 LCIF Collaborated with Johnson and Johnson vision to co-create Sight for kids - the largest - known, school based eye health program in the world. This program provides comprehensive eye health services in low income schools around the World. Till now 42 million students were screened around the world, 6 million students were treated.



**A Ball for all (Kenya) :** Lions taught visually impaired students in Nairobi (Kenya), How to play foot ball with a special kind of ball, A Ball for All is a program found by Lion Elias Mastoras, that distributes the balls to children for free, making the game for all children. They teach the students to play foot ball using this special kind of ball, Which is a mini sound ball, one that rattles just like the official blind soccer ball, but is light enough for a 2 year old. The balls can only be donated and are never for sale.




**Medical Centre (Maharashtra)**

Lions Club of Thane North (Maharashtra) managed 3 medical centres, two situated at khopat and

one in Kopri. Jeyashree Raj Lions Medical Centre is a fully owned, Managed and administered medical centre by Lions Club of Thane North. It is operational since the year 2000, proudly benefitting the under privilidged section of our society by providing high class medical facilities at exceptionally lower cost.

**DISTRICT NEWS :** District Special Convention was held at Kovilpatti




Governor MJF Lion Dr. Francies Ravi Inagurated Regional Leadership Development Seminar on 27.08.2023 at Lions Cosmas Hall in Sivakasi. Lion S.N.Sivapiran gave Special Speech about Leadership






# COVER STORY - Education Elevated by our club
## (Junior School Excellence)

**MJF Lion G.Ramamoorthy,**
Lions School Correspondent (1991 - 1994, 2009 - 2012)



The Lions Club of Sivakasi decided to start an English Medium School at Sivakasi which would be indistinguishable to Public Schools in hill stations like Ooty, Kodaikanal and Yercaud. Its permanent project, The Sivakasi Lions Kindergarten School was established in 26th August 1968 in Gnanagiri Road, Sivakasi with an LKG section having 5 students and 2 teachers Mrs J Chandra Gnanamani and Miss Ebby Samuel. The school required a spacious site at its growth into a primary school within 2 years. The foundation stone for the new building at Palaniandavarpuram Colony was laid by Bharat Ratna Mr K Kamaraj MP on 6th April 1970. The school has grown into a Co-educational Matriculation Higher Secondary School cum Benchmark Institution in Southern TamilNadu. During the tenure of correspondent MJF Lion G.Ramamoorthy, the Silver Jubilee of the School was celebrated during 1992 -93.

Our junior school possesses a wholesome education and aspires the students to excel in scholastic and co-scholastic achievements. Ofcourse, it is a cozy nest which has full of joy, curiosity, hope, knowledge and constant change. At present, it has a strength of 585 students and 37 teachers including the Primary Incharge. It is well-equipped with 2 IT Labs, an A/C library with 7139 volumes and 7 magazines, a General Science Lab, a Math Lab, 23 smartboard classrooms, 3 A/C staffrooms, an A/C Music Room and an A/C Montessori Lab for the benefits of the students. The smartboard facility offers a multidimensional approach to make the learning process effective and enjoyable.

We follow a child-centric curriculum called Montessori Education, in which children explore, touch and learn without fear. It teaches the children an “I can do it attitude” that ensures their future success. Hands-on experience gaining in the Math Lab makes them autonomous learners.

The well-stuffed library, an important cornerstone of the students community drives them seek new skills to achieve excellence in every walk of life. The best readers who connect their heart with books are honoured during Library Week Celebration. The ample number of participation in the various activities held in the assembly, association meetings and various celebrations mould them shine into constellations of this domain. The cubs and bulbul classes help to develop their social characters and exhibit their leadership qualities.

Institute of Language Management (ILM), Bangalore and abacus classes were introduced to add bits of colourful feathers in our crown. ILM helps to empower students to interact globally through English with effective leadership whereas abacus learning covers a broader horizon which includes maths proficiency as well as whole brain development. The existing online Minds park classes strenghthen their mathematical skills, enhance their reading quality and enrich their vocabulary. These co-curricular activities help our students of Grade 3 to bring laurels to our school by achieving 10 National Ranks in Unified International English Olympiad and one National Rank in Unified International Maths Olympiad.

KG tiny tots, grown in a perfect ambience are made to equip the spirit of enthusiasm and master in their work. The happy thinkers of the school are made to enjoy the power of happiness through Colour Day Celebraions. We steadily work towards gifting our children a great future and mould our cubs become true leaders of tomorrow.

## Mrs. K.Rajakalyani M.A., B.E., (National Awardee)

நமது சிவகாசி லயன்ஸ் பள்ளியின் மாபெரும் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அனைத்து தலைமை ஆசிரியர்களில் திருமதி.K.ராஜகல்யாணி M.A., B.Ed., அவர்களின் பங்கு மிகவும் சிறப்பு வாய்ந்தது. இவர் 1983 - 85 (Incharge) மற்றும் 1993-2004 வருடம் வரை தலைமை ஆசிரியராக பணியாற்றினார். மேலும் மாநிலத்தின் சிறந்த ஆசிரியர் விருது (2001), தேசிய அளவில் சிறந்த ஆசிரியர் விருதும் (2003) பெற்று நமது பள்ளிக்கு சிறப்பு சேர்த்துள்ளார். 05.06.2003 அன்று அப்போதைய இந்திய ஜனாதிபதி Dr.A.P.J.அப்துல்கலாம் அவர்களின் கரங்களால் விருதைப் பெற்றார்.













# *Second Regular Meeting (August)*

***Lion Karunaimani Inbasagaran***
***(Editor 2022- 23)***



நமது சங்கத்தின் ஆகஸ்ட் மாத இரண்டாம் கூட்டம் 23-8-2023 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக PDG Lion Dr.ஆதிலட்சுமி குருமூர்த்தி அவர்கள் கலந்து கொண்டார்கள்

சந்திராயன் - 3 நிலவில் தரையிரங்கியதை கொண்டாடும் வகையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் லயன் S.N.சிவபிரான் அவர்கள் இனிப்பு வழங்கினார். லயன் ரேணுகாதேவி முத்துக்குமரனின் விளையாட்டுப் போட்டியுடன் மிகவும் சுறுசுறுப்பாக கூட்டம் தொடங்கியது.

Lions Prayer லயன் ஷர்மிளி ரவீந்திரன் அவர்களும் கொடி வணக்கத்தை லயன் தீபா அருண்குமார் அவர்களும் வாசித்தார்கள். உலக அமைதிக்காக ஒரு நிமிடம் மௌனம் மேற்கொண்டோம். நமது சங்கத் தலைவர் லயன் K.பிரபாகர் அவர்கள் அவையினரை வரவேற்று வரவேற்புரை ஆற்றினார். செயலாளர் லயன் நித்திய பாண்டி அவர்கள், சங்கத்தின் செயல்பாடு மற்றும் சேவைகளைப் பற்றிக் கூறினார்.

சிறப்பு விருந்தினர் PDG லயன் Dr.ஆதிலட்சுமி குருமூர்த்தி அவர்களை, லயன் Dr.தீப்தா மதி ஹேமந்த் அவைக்கு அறிமுகப்படுத்தினார்.

நமது சிறப்பு விருந்தினர் ஒரு தலைசிறந்த Gynaecologist and Obstetrician, 1978-யில் லயன்ஸ் சங்கத்தில் இணைந்தார். 1987-ல் First Women Lion member of Lions Club of Madurai Host ஆனார். பின்பு சங்கத் தலைவர், ZC, DC Eye Donation, VDG என்று பல பதவிகளில் இருந்தார். 21-ஆம் நூற்றாண்டின் முதல் பெண் ஆளுநர்

(2001-01) Dist 324 B3 என்ற பெருமைக்குரியவர். மேலும் இவர் International senior Trainer for Lions Quest Program ஆக இருக்கின்றார். அவர் தன்னுடைய உரையில் சர்வதேச லயன்ஸ் சங்கத்தின் வரலாறு மற்றும் இந்தியாவில் லயன்ஸ் சங்கம் தோன்றிய வரலாறு மற்றும் அமைப்பை பற்றி அனைவரும் புரியும் வண்ணம் தெளிவாக விளக்கினார். மேலும் நமது சங்க உறுப்பினர்களுடன் ஏற்பட்ட தோழமை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

நமது சங்கத்தின் இரண்டாவது மாத இதழை நமது சிறப்பு விருந்தினர் அவர்கள் வெளியிட்டார். நமது சங்க இதழை எப்போதும் விரும்பிப் படிப்பதாக தெரிவித்தார். அன்றைய சேவைத்திட்டமாக அட்சயா என்ற மாணவிக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

இம்மாதம் பிறந்தநாள் மற்றும் திருமணநாள் கொண்டாடும் உறுப்பினர்களை மேடைக்கு அழைத்து கேக் வெட்டி கொண்டாடினோம். அவர்களுக்கு லயன் தீபா அருண்குமார் வாழ்த்துரை கூறினார். சங்க தலைவர் லயன். K.பிரபாகர் மற்றும் லயன் ஷகிலா பிரபாகர் அவர்கள் Early bird award வழங்கினார்கள். Tail Twister Award வழங்கப்பட்டது. செயலாளர் லயன் P.சுதாகரன் அவர்கள் நன்றி கூற, தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.














Touch the Heart by Service

## 324 கூட்டு மாவட்ட சங்க கூட்டம் - ஈரோடு சுப்ரீம் லயன்ஸ் சங்கத்துடன்

MJF Lion P.Vinoth Kanna



தொண்டும், தோழமைக்கும் பெயர் பெற்ற வரலாற்று சிறப்பு மிக்க நமது சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் இந்த வருடத்தின் Inter Club Meeting Co-ordinator என்ற பொறுப்பை கொடுத்த சங்கத் தலைவர் லயன் K.பிரபாகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

நமது சங்கத்தின் செயல்பாடுகளும், சேவைகளும் மிகச்சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றது. இப்பொழுது நமது சங்கத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியை நமது கையில் எடுத்துள்ள நமது தலைவர் அவர்கள், நமது 324 A மாவட்டம், 324 கூட்டு மாவட்டம், தேசிய அளவிலும், அயல் நாடுகளிலும் கூட்டு சங்க கூட்டம் நடத்தி மற்ற சங்கங்களின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளைப் பற்றி தெரிந்து கொண்டு நமது சங்கத்தை அடுத்த கட்ட பாதையில் கொண்டு செல்ல திட்ட மிட்டுள்ளார். ஏற்கனவே தூத்துக்குடி லயன்ஸ் சங்கத்துடன் ஒரு சிறந்த கூட்டு சங்க கூட்டம் கடந்த மாதம் நடைபெற்றது.

செப்டம்பர் 7ம் தேதி 324 கூட்டு மாவட்ட சங்க கூட்டம் ஈரோடு சுப்ரீம் சங்கத்துடன் நடத்த ஒரு மாதத்திற்கு முன்னதாகவே திட்டமிட்டு, நல்ல A/c Van, A/c தங்கும் அறை என இரண்டு நாட்கள் இன்பச் சுற்றுலா போன்று ஏற்பாடு செய்திருந்தோம். நமது சங்கம் சார்பாக 17 உறுப்பினர்கள் கலந்து கொண்டோம்.

Lions Club of Erode Supreme 1992ஆம் ஆண்டு 28 பட்டய உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்டது. தற்போது 300 உறுப்பினர்களுக்கு மேல் இருக்கின்றார்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கும் 150 நபர்கள் குறையாமல் வருகிறார்கள். PID லயன் K.தனபாலன் மற்றும் சங்க உறுப்பினர்களின் விருந்தோம்பல் கண்டு வியந்து நின்றோம். கூட்டம் குறித்த நேரத்தில் ஆரம்பித்தது முதல், சரியாக 9.30 மணிக்கு கூட்டத்தை நிறைவு செய்வது வரை மிகச்சரியாக ஒவ்வொரு கூட்டத்திலும் கடைபிடிக்கிறார்கள். அதே போல் ஒவ்வொரு கூட்டத்தையும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியுடன் நடத்தி அனைவரையும் கலந்து கொள்ள வைக்கின்றார்கள்.

உறுப்பினர்கள் குடும்பத்துடன் கலந்து கொள்கின்றனர். அனைவரும் மிகவும் இனிமையாகப் பழகுகின்றார்கள். PID லயன் K.தனபாலன் அவர்கள் நடுவராகப் பங்கு பெற்ற பட்டிமன்றம் மறக்கவே முடியாது.

மேலும் Erode Supreme சங்கத்தின் Blood Bank மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவர்களுடன் கலந்து கொண்ட Business Session-யில் அவர்களுடைய சங்கத்தின் செயல் திட்டங்கள், Records Maintenance பற்றி அறிய ஒரு வாய்ப்பு கிடைத்தது. சுமார் 200 நபர்கள் ஒரே நேரத்தில் விருந்து உண்ணும் அளவிற்கு ஒரு பெரிய அறை. அனைத்து உணவுகளும் சுடச்சுட பரிமாறப்பட்டன. பருப்பு சாதம், தயிர் ருசி மறக்கவே முடியாது, இன்றும் எங்கள் நாவில் இருந்து ருசி அகலவில்லை. (Erode Supreme கிளப்புடன் தோழமையைப் பெருக்கிக் கொள்ள ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது)

இது தவிர, புகழ் பெற்ற மூன்று கோவில்களில் தரிசனம் பெற்றோம். முதலாவதாக கொடுமுடி திருக்கோவில், மும்மூர்த்திகளான சிவன், பிரம்மா, விஷ்ணு மூவரையும் ஒரே இடத்தில் கண்டோம். தேவாரப் பாடல் பெற்ற கொங்கு நாட்டுத்தலங்களில் இது 6வது தலம்.

அடுத்ததாக திண்டல் முருகன் கோவில், கொங்கு நாட்டு ஆலய அமைப்பில் தனிப்பட்ட ஓர் அமைப்பு தீபஸ்தம்பத்தைக் கோயில் வெளியே நிறுத்திக் காட்டுவதாகும். இங்கு இது போல் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கார்த்திகை தீபத்தன்று திருவிளக்கு ஏற்றி பக்தர்கள் ஜோதி வழிபாடு நடத்துவார்கள். இதன் அருகில் சமய தொடர்பான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக பவானி சங்கமேஸ்வரர் கோவில், தேவாரப் பாடல் பெற்ற கொங்கு நாட்டுத்தலங்களில் இது 3வது தலம். இங்கு ஆதிகேசவப் பெருமாளுக்கும் சௌந்திரவல்லி தாயாருக்கும் சந்நிதிகள் அமைத்து சைவ வைணவ ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

TEX VALLEY-யில் உற்சாகமாக ஷாப்பிங்கும் சென்றோம். இந்த இரண்டு நாளில் எங்கள் தோழமையை வளர்த்துக் கொண்டதோடு, ஒரு ஆன்மீகப் பயணமும் செய்த மனதிருப்தி அடைந்தோம்.


















*Touch the Heart by Service*

# ஈரோடு பட்டி மன்றம் – ஒரு பார்வை

லயன் பிரேமலதா பாலசுப்பிரமணியன்
Editor 2010-11



**இன்றைய குழந்தைகளின் வளர்ப்பு முறை சரியா? தவறா?**

சிவகாசி அரிமா சங்கமும், ஈரோடு அரிமா சங்கமும் செப்டம்பர் 7ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் மிகச்சிறப்பாக அமைந்தது. இரு சங்கங்களின் உறுப்பினர்கள் பங்கேற்ற இன்றைய குழந்தைகளின் வளர்ப்பு முறை சரியா?... தவறா?... என்னும் தலைப்பில் அனைவரையும் கவர்ந்த பட்டி மன்றம். PID லயன் தனபாலன் (ஈரோடு சுப்ரீம் சங்கம்) நடுவராகத் தலைமை வகித்தார்.

தவறு என்ற அணியில் லயன் தேவி நித்யபாண்டி, லயன் தனபாக்கியம் (ஈரோடு சுப்ரீம் சங்கம்) லயன் கலையரசன் (ஈரோடு சுப்ரீம் சங்கம்). சரியே என்ற அணியில் லயன் சங்கரி பாலா, லயன் ராதிகா தேவி முருகையன், லயன் ராதா மனோகர் (ஈரோடு சுப்ரீம் சங்கம்) மிகச்சிறப்பாக தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர்.

முதலில் தவறு என்ற அணியில் பேச வந்த லயன் தேவி நித்யபாண்டி இன்றைய குழந்தைகளுக்கு கொரோனா கால கட்டத்தில் On-line கல்விக்காக வாங்கிக் கொடுக்கப்பட்ட Mobile Phone-களில் இப்போது குழந்தைகள் Addict ஆகி விட்டதை தவிர்க்க பெற்றோர் தவறி விட்டதைக் குறிப்பிட்டார். குழந்தைகளை அதிக செல்லம் கொடுத்து கண்டிக்காமல் வளர்ப்பதால் அவர்கள் தங்கள் வாழ்வியல் கடமைகள் அறியாமல் வளர்கிறார்கள். மேலும் சகிப்புத் தன்மை, பொறுமை இல்லாதவர்களாக, பெரியவர்களது ஆலோசனையை கேட்காமல், சுறுசுறுப்பின்றி எந்த நேரமும் T.V., Cell Phone என்று வளர்கிறார்கள். பெண் குழந்தைகள் கண்ணியமாக உடை அணியுமாறு வளர்க்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இன்றைய குழந்தை வளர்ப்பு முறை சரி என்று பேசிய லயன் ராதிகா குழந்தைகள் இன்றுதான் சுதந்திரம், ஆளுமை

தன்மை, சுயமாக முடிவெடுக்கும் திறன் உடையவர்களாக வளர்க்கப்படுகிறார்கள். பொத்தி பொத்தி வளர்த்தாலும் உயர்ந்த நிலையை அடைவது இன்றைய வளர்ப்பு முறையில்தான் என்று ஆணித்தரமாக வாதிட்டார்.

ஈரோடு சங்கத்தின் உறுப்பினர் லயன் தனபாக்கியம், இன்றைய குழந்தை வளர்ப்பு முறை முற்றிலும் தவறு என்று சாடினார். சரியான வாழ்க்கை முறையை பின்பற்றாமலும் தவறான பழக்க வழக்கங்களில் ஈடுபடுவதை தடுக்க முடியாமலும் வளர்க்கப்படுகிறார்கள் என்று கூறினார்.

அடுத்து பேசிய லயன் சங்கரி பாலா இன்றைய குழந்தைகளை பெற்றோர் புரிந்து கொண்டு வளர்ப்பதால் சிறப்பாக படித்து எல்லா துறைகளிலும் கோலோச்சுகின்றார்கள் என்றார்.

அடுத்து பேசிய லயன் கலையரசன் (ஈரோடு சுப்ரீம் சங்கம்) குழந்தை வளர்ப்பில் இன்றைய பெற்றோர்கள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டினார். பெற்றோர் குழந்தைகளுக்கு தவறானவற்றை சுட்டிக் காட்ட முடியாமலும் கலாச்சாரத்தைப் பேணமுடியாமாமலும் அவதிப்படுவதை எடுத்துக்கூறினார்.

இறுதியாக குழந்தை வளர்ப்பு முறை சரியே என்று வாதிட்ட ஈரோடு சங்கத்தின் லயன் ராதா மனோகரன் மாற்றம் உலகில் ஏற்படும்போது குழந்தை வளர்ப்பு முறையும் மாறும். அதன்போக்கில் குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். ஆனால் முந்தையகால குழந்தைகளைவிட படிப்பிலும், சாதிப்பதிலும், சம்பாதிப்பதிலும் நிகரற்று விளங்குகிறார்கள் என்று எடுத்துக் கூறினார்.

நடுவர் PID லயன் தனபாலனின் தீர்ப்பு என்னவோ தவறு என்ற பக்கம்தான் கிடைத்தது. ஆனால் நாம் நமது குழந்தைகளை சரியான வழிமுறைகளில் வளர்ப்பதற்காக 6 வழிமுறைகளை நமது PID லயன் K.தனபால் அவர்கள் அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வின் முடிவை எடுத்துரைத்து நமக்கெல்லாம் ஒரு வழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். அந்த 6 வழிமுறைகள் என்னவென்றால்,

1. குழந்தைகளுக்கு அவரவர் வேலையை அவரவரே செய்ய வாய்ப்பு வழங்குவது.

2. சக மனிதரோடு உறவாடுகிற திறனை வளர்ப்பது.

3. போட்டியாளனாக உருவாக்காமல் இருப்பது.

4. நமது கட்டுப்பாட்டிற்குள் என எண்ணாமல் இருப்பது.

5. பெற்றோருடைய மன அழுத்தத்தை புரிந்து கொள்வது.

6. வாசிப்புப் பழக்கம் உண்டாக்குதல்.

இவை அனைத்தையும் கடைபிடிக்கும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சரியாக வளர்க்கலாம் என கூறி நம் அனைவரையும் யோசிக்க வைத்தார்.









# FIRST REGULAR MEETING IN SEPTEMBER

**Lion Bhavani Sudhir**
Editor 2021-2022



கல்லை உளியால் செதுக்கி உருவம் கொடுப்பது சிற்பி என்றால் மாணவர்களை சொல்லால் செதுக்கி உருவாக்குவது சிறப்பு மிக்க நமது நல் ஆசிரியர்களே, செப்டம்பர் மாதத்தின் முதல் பொதுக்குழுக் கூட்டம் நமது லயன்ஸ் பள்ளியில் பணியாற்றும் மதிப்புமிக்க ஆசிரியர்களை கௌரவப்படுத்தி பாராட்டும் வகையில் கொண்டாடப்பட்டது.

13.09.2023 அன்று மாலை நமது பள்ளி வளாகம் முழுவதும் ஆசிரியர்களால் நிரம்பியது. கூட்டத்திற்கு வந்த ஆசிரியர்களை உற்சாகப்படுத்தும் விதமாக லயன் ரேணுகாதேவி முத்துக்குமரன் விளையாட்டுப் போட்டிகள் நடத்தினார்.

கொடி வணக்கத்தை லயன் சித்ரா குணசேகரனும், அரிமா பிராத்தனையை லயன் பவானி சுதிரும், செயலாளர் அறிக்கையை லயன் நித்தியபாண்டி அவர்களும் வாசித்தார்கள். உலக அமைதிக்காக ஒரு நிமிடம் மௌனம் கடைபிடிக்கப்பட்டது. சங்கத்தலைவர் வரவேற்புரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர் திரு.T.அண்ணாமலையான் அவர்களை லயன் பிரேமலதா பால கிருஷ்ணன் அவர்கள் சிறப்பாக அறிமுகம் செய்தார். இவர் சிவகாசி காமராஜர் பள்ளியிலும், ரத்தினவிலாஸ் பள்ளியிலும் Correspondent-ஆக இருந்தவர். தற்போது சிவகாசி இந்து நாடார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் Correspondent-ஆக இருக்கிறார்.

திரு.திரு.T.அண்ணாமலையான் அவர்கள் “A Journey of Impact - Teachers Day Tribute” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். டாக்டர் A.P.J.அப்துல்கலாம் அவர்கள் ஜனாதிபதியாக இருந்த போதும், ஒரு ஆசிரியராக இருப்பதையே

விரும்பினார். ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க ஒரு ஆசிரியரால் மட்டுமே முடியும் என்பதை விளக்கினார். நாம் ஆசிரியர்களை ஊக்கப்படுத்தினால், அவர்கள் முழு ஈடுபாட்டுடன் தனது பணியைச் செய்வார்கள். மேலும் அது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குள் ஒரு நல்ல பிணைப்பை உருவாக்கும். ஒரு சிறந்த ஆசிரியராக எப்படி இருப்பார்கள் என்பதை ராமானுஜர் கதை வாயிலாகக் கூறினார்.

முகேஷ் அம்பானி தனது ஆசிரியர் சாராபாய் அவர்கள் தன்னை ஊக்குவித்ததால் தான் தற்போது தன்னால் இவ்வளவு பெரிய வளர்ச்சியை அடைய முடிந்தது என்றார்.

“All teachers join as teachers and retire as teachers”, ஆனால் மாணவர்கள் சிறு குழந்தைகளாய் வருவார்கள், Teenage-யில் வெளி உலகம் சென்று பெறும் எந்த ஒரு வெற்றியும் ஆசிரியர்கள் கொடுத்த impact-ஆல் மட்டுமே என்று கூறி தன்னுடைய உரையை முடித்தார். லயன் M.ராமமூர்த்தி, ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டினார். பின்பு Resolution Certificate தலைமை ஆசிரியரிடம் வழங்கப்பட்டது. தலைமை ஆசிரியர் ஏற்புரை வழங்கினார்.

சேவைத்திட்டமாக Lion S.R.ஸ்ரீதர் அவர்கள் Scanner Machine-ஐ SIPT முதல்வர் திரு.பாலகணபதியிடம் வழங்கினார். புதிய உறுப்பினர்களுக்கு International Membership Certificate and pin கொடுக்கப்பட்டது. MJF Lion P.வினோத் கண்ணா ஈரோடு சுப்ரீம் கிளப்புடன் நடந்த கூட்டத்தின் அனுபவங்களை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

உறுப்பினர்களின் பிறந்தநாள் மற்றும் திருமண நாளுக்கு லயன் தீபா அருண்குமார் வாழ்த்துக்கள் கூறி கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. சிறப்பாக விளையாட்டுகள் விளையாடிய ஆசிரியர்களுக்கும், சிறப்பு விருந்தினருக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இனிய விருந்தோம்பலுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

















# *Bulletin Month Celebration*

## நமது சங்க இதழின் அர்ப்பணிப்பைக் கொண்டாடுவோம்

**முதல் சங்க மலர் :**

1961 முதல் நமது சங்கம் சமூகத்தை மேம்படுத்த பல சேவைகளும் நிரந்தர திட்டப்பணிகளும் செய்து வருகின்றது. நமது முதல் சங்க மலர் தோன்றி 60 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடுவோம்.


1963, டிசம்பர் 1ம் தேதி நமது சங்கத்தின் இரண்டாவது பட்டய இரவு கொண்டாட்டம். மாவட்ட நீதிபதி ஜனாப் சையது இப்ராகிம் எம்.ஏ.பி.எல் அவர்களை சிறப்பு விருந்தினராகக் கொண்டு சிறப்பாக நடைபெற்றது. அதற்கென ஒரு சிறப்பு மலர் (Souvenir) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நமது சங்கத்தின் முதலாவது சங்க மலரும் அதுதான். அதில் அன்றைய பன்னாட்டு அரிமா இயக்கத்தின் தலைவர் அரிமா ஆஃப்ரே டி, கிரீன், பன்னாட்டு அரிமா இயக்கத்தின் ஆசிய தலைமை செயலாளர் அரிமா N.பண்டோல், மாவட்ட ஆளுநர் அரிமா டாக்டர் T.V.வெங்கடேசன் மற்றும் அரசியல் தலைவர்கள் என பல பெரியோர்களின் வாழ்த்துரைகள் இடம் பெற்றன. பட்டய உறுப்பினர்களின் புகைப்படங்கள் பிரிசுரிக்கப்பட்டன. அன்றைய பட்டய தின விழாவிலே நடத்தப்பட்ட சேவைத்திட்டங்களுக்கான புகைப்படங்கள், கலை நிகழ்ச்சி புகைப்படங்கள் மற்றும் நம் சங்கம் நம் நகர் பொருட்காட்சியில் நடத்திய மருத்துவ முகாமின் புகைப்படங்கள் என அச்சிட்டு சிறப்பு மலராக வெளிவந்தது.

**இரண்டாவது சங்க மலர் :**

அரிமா ஆண்டு 1967-68ல் சங்கத்தலைவராக அரிமா K.A.A.அருணாசலம் அவர்களும், செயலாளராக அரிமா D.ராஜாபால் அவர்களும், பொருளாளராக அரிமா G.கணேசன் அவர்களும் பதவி ஏற்றுக்கொண்டனர். 1967 நவம்பர் மாதம் 25ம் தேதி மாவட்ட ஆளுநர் அரிமா G.K.தாமோதர் ராவ், சென்னை அவர்களால் நம் அரிமா பள்ளிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அரிமா

G.கணேசன், அரிமா டி.ராஜாபால், அரிமா K.A.A.அருணாசலம், அரிமா E.A.E.T. சுந்தரராஜன் ஆகியோர்களை குழுவாகக் கொண்டு 1968ம் ஆண்டு ஜுன் மாதம் ஒரு சிறப்பு சங்க மலர் வெளியிடப்பட்டது. இது நமது சங்கத்தின் இரண்டாவது சங்க மலர். சிவகாசி அரிமா சிறுவர் பள்ளியின் தொடக்க விழாவினை நினைவாகக் கொண்டு வெளியிடப்பட்டது. அன்றைய இந்திய ஜனாதிபதி மதிப்பிற்குரிய ஜாகீர் ஹுசேன் அவர்கள் சார்பாக அவரது செயலாளர் உயர்திரு நாகேந்திர சிங் அவர்களும், துணை ஜனாதிபதி மதிப்பிற்குரிய பி.வி.கிரி, இந்திய பிரதமர் சார்பில் அவரது ஆலோசகர் H.Y.சாரதா பிரசாத், தமிழக முதலமைச்சர் உயர்திரு.C.N.அண்ணாத்துரை, பன்னாட்டு அரிமா இயக்கத்தலைவர் அரிமா ஜார்ஜ்பேர்ட், தென்மேற்கு ஆசிய அரிமா தலைமைச் செயலகத்தின் செயலாளர் மினு ஜே.டி.எஞ்சினியர், பன்னாட்டு நிர்வாகக்குழு முன்னாள் உறுப்பினர் அரிமா நோசீர் N.பண்டோல் மற்றும் துணை மாவட்ட ஆளுநர், வட்டாரத்தலைவர் ஆகியோரின் வாழ்த்துரைகள் மற்றும் கட்டுரைகள் இடம் பெற்றன. பின் 1975 முதல் "The Jewel" என்ற மாத இதழாக தொடர்ந்து 48 வருடங்களாக வெளியிடப்படுகின்றது.

**From the SOUVENIR - 1963**



MESSAGE

TO THE LIONS CLUB OF SIVAKASI:

It gives me great pleasure as President of the International Association of Lions Clubs to convey my congratulations and my greeting on the occasion of the celebration of your Second Charter Anniversary. It is quite apparent from your splendid record of service that you are giving evidence of Lionism at its best.

The growth of our Association has been nothing short of phenomenal. At the present writing, 674, 338 Lions in 17,664 Clubs are responding to the challenge of need in 125 countries and geographical locations.

In these many areas of the world, languages differ, as do customs as well as religious and cultural backgrounds. And yet basic in the philosophy of Lionism is its strong accent on service, and this transcends national boundaries to such a degree that service-minded men everywhere are willing to give themselves in dedication to these goals.


We are sure that you have experienced the warm exhilaration that comes from service well rendered, and shall continue to seek out opportunities for further humanitarian effort.

And so, my thanks for all you have done, and my congratulations. May the years ahead hold even greater successes.

Aubrey D. Green
President
LIONS INTERNATIONAL

Chicago, Illinois
November 15, 1963

**From the SOUVENIR - 1968**



NOSHIR N. PUNDOLE
20, NEPEAN SEA ROAD,
BOMBAY 6. INDIA.

PAST INTERNATIONAL DIRECTOR
LIONS INTERNATIONAL

MESSAGE.

We bring greetings and good wishes to the Lions of Sivakasi on the occasion of the opening of a very laudable project they have put through in a Kindergarten School.

Children are the backbone of the nation for the coming generation and their upbringing in proper social background and sound education is a must for any community. We are happy that the Lions of Sivakasi have devoted their attention to this most important sphere.

The future is full with opportunities for the Lions to be of service and we are confident that the Sivakasi Lions will have their part to play and will bring glory in this quest not only to themselves but to Lionism in general.

Wishing you and your club all the best.

(Sd.) N. N. PUNDOLE,
PAST INTERNATIONAL DIRECTOR.

# *The heart and soul of "The Jewel"*


## Our dedicated Past Editors



Lion A.R.Sankareswaran
1975 - 1979



Lion Subasingh Indiarajan
1979 - 1980



Lion Chidambara Nataraj
1980 - 1981
1985 - 1986



Lion Hema Subasingh
1982 - 1983



Lion Abdul Shukoor
1983 - 1985
1988 - 1989
1993 - 1994



Lion Ambuli Rajan
1986 - 1988



Lion S.Krishnamoorthy
1989 - 1991
1997 -1998



Lion K.A.Murugaian
1991 - 1992



Lion G.Chandaramohan
1992 - 1993



Lion J.Ramesh Kumar
1994 - 1995



Lion M.A.P.Chermaraj
1995 - 1996
2001 - 2002



Lion S.Stalin
1996 - 1997



Lion P.S.A.Kannan
1998 - 1999



Lion S.R.Sridhar
1999 - 2000



Lion A.K.K.Baskaran
2000 - 2001



Lion Raddhika Devi Murugaian
2002 - 2003
2013 - 2014



Lion Murugeswari Ravi
2003 - 2004



Lion Sudha Saratha
2004 - 2005



Lion Usha Kumaravel
2005 - 2006



Lion Ravi
2006 - 2007



Lion Aruna Sudarsen
2007 - 2008



Lion Kothai Senthil Velavan
2008 - 2009
2014 - 2015



Lion Vathsala
Dhanasekaran
2009 - 2010



Lion Premalatha
Balasubramanian
2010 - 2011



Lion Sivashankari
Kathiravan
2011 - 2012



Lion T.Sivabalan
2012 - 2013



Lion Thilageswari Raju
2015 - 2016



Lion Subathra
Paramanandham
2016 - 2017



Lion Sankaribala
2017 - 2018



Lion Bhavani Sudir
2018 - 2019
2021 - 2022



Lion Jeyanthi
Senthilkumar
2019 - 2020



Lion Jeya Nagaraj
2020 - 2021



Lion Karunaimani
Inbasagaran
2022 - 2023

# அரிமா சங்க இதழ்கள் – நோக்கம் என்ன?

**Lion S.Krishnamoorthy MJF**

Editor 1989 - 91, 1997-98



1917-ம் ஆண்டு ஜுன் 7ம் நாள் நம் பன்னாட்டு அரிமா இயக்கம் உருவானது. நம் அரிமா இயக்கத்தின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர் அரிமா மெல்வின் ஜோன்ஸ் அவர்கள். அவர் தம் வாழ்நாளில் இயக்கத் தலைவர் பதவியை வகித்தவர் அல்ல.

அவர் அரிமா இயக்கத்தின் செயலாளர், பொருளாராக நியமனம் பெற்றார். எந்த இயக்கமும் தனது செயல்பாடுகளை அச்சிட்டு அனைவரும் அறியச் செய்தால் தான் அதன் ஈடுபாடு சிறப்பாக இருக்கும் என்பதில் மிகுந்த நம்பிக்கை வைத்தவர்.

நம் அரிமா இயக்கத்தின் “The Lions Club Magazine” என்று முதல் பிரதியை அச்சிட்டு வெளியிட்டார். அதன்பின் “The Lion” என பெயர் மாற்றம் கண்டு வெளி வந்தது. அதன் ஆசிரியராக அரிமா மெல்வின் ஜோன்ஸ் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் செயல்பட்டார்கள் என்பது சிறப்பு.

நம் அரிமா இயக்கம் பல்வேறு நாடுகளிலும் பரவி “The International Association of Lions Clubs” என பெயர் உறுமாற்றம் கண்டது அவர் அன்று ஒவ்வொரு அரிமா சங்கங்களுக்கும் அறிவுரை கூறி, அதன்படி உலகின் ஒவ்வொரு சங்கங்களும் தமக்கென ஒரு அரிமா சங்க இதழை பரிசுரம் கண்டு வெளியிட்டது.

1975-ல் முன்னாள் தலைவர் அரிமா A.R.சங்கரேஸ்வரன் அவர்களை ஆசிரியராக நியமித்து “The Jewel” வெளியானது. அன்று அரிமா இதழ் புத்தகமாக வெளிவராமல் அரிமா News Letter-ஆக விருதுநகர் Letter Press-ல் அச்சிட்டு வெளிவந்தது. அன்று நம் The Jewel அரிமாக்கள் அனைவராலும் பாராட்டுக்கள் பெற்று, நம் சங்க உறுப்பினர்களுக்கு ஒரு உற்சாகத்தை ஊட்டியது என்றால் அது மிகையாகாது.

சங்க இதழ் The Jewel முதன் முதலாக 1979-80ம் ஆண்டு அரிமா சுபாஷ் சிங் இந்தியாராஜன் அவரை ஆசிரியராகக் கொண்டு ஆப்செட் முறையில் கவர் பிரிண்ட் செய்யப்பட்டு நம் உறுப்பினர் அனைவருக்கும் உற்சாகத்தை அளித்தது.

அன்று 324-ஆ மாவட்டத்தில் மொத்தம் உள்ள சங்கங்களில், 84 சங்கங்கள் சங்க இதழ்கள் வெளியிட்டதில், நம் சிவகாசி அரிமா சங்க இதழ் முதல் பரிசுக்கு தேர்வு பெற்று பரிசையும் தட்டிச் சென்றது.

பின் அவரை தொடர்ந்து 1980-81ம் ஆண்டின் இதழ் ஆசிரியராக மறைந்த அரிமா அ.சிதம்பர நடராஜன் அவர்கள் The Jewel இதழின் ஆசிரியராக பொறுப்பேற்று இன்னும் சிறப்பாக செயல்பட்டார். 1982-83 அன்று அரிமா மகளிர் ஹேமா சுபாசிங் அவர்கள். இவர்தான் நமது இதழின் முதல் பெண் இதழாசிரியர் என்ற பெருமைக்குரியவர். சிவகாசி அரிமா சங்கத்தின் “The Jewel” இதழாசிரியராக பலர் பொறுப்பேற்று இன்னும் சிறப்பேற்றினர். மாவட்டம், கூட்டு மாவட்ட அளவில் நம் “The Jewel” இதழ் பல பரிசுகள் வென்றுள்ளது.

அரிமா மகளிர் சங்கம் முடிவு பெற்ற பின், அரிமா மகளிர்களும் ஆசிரியராக பணியாற்றியுள்ளனர். நம் இதழ்கள், ஆளுநர், மண்டலத்தலைவர்கள், வட்டாரத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள் என பலராலும் பாராட்டுப் பெற்றது.

**சங்க இதழ் ஆசிரியராக என் அனுபவங்கள் :** நான் இதழ் ஆசிரியராக 1997-98, 1989-90 மற்றும் 1990-91 ஆகிய மூன்று ஆண்டுகள் பணியாற்றினேன் என பெருமைபட கூறிக் கொள்கிறேன்.

1989-90ம் ஆண்டு நம் சங்கத்தலைவர் அரிமா A.P.செல்வராஜன் அவர்கள் 1990-91ம் ஆண்டு நம் சங்கத்தின் தலைவர் அரிமா KAPA ராஜசேகரன் அவர்கள் 1997-98ம் ஆண்டு நம் சங்கத்தலைவர் அரிமா AMSG அசோகன் அவர்கள் சங்கத்தலைவர்களின் வற்புறுத்தலால் நம் சங்க இதழ் “The Jewel”-ன் ஆசிரியராக பதவி வகித்தேன்.

1997-98ம் ஆண்டு மாவட்ட ஆளுநர் பாளையங்கோட்டை அரிமா சங்கத்தின் அரிமா P.L.முருகப்பன் அவர்கள் அந்த ஆண்டு நம் அரிமா சங்க இதழ் "The Jewel" புதியதாக வேறு எந்த அரிமா சங்கமும் வெளியிடாததாக அமைந்தது. அதற்காக நம் சங்க தலைவர் அரிமா AMSG அசோகன் அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

மொத்தம் வெளியிட்ட 10 இதழ்களில் 4 இதழ்கள் பெரிய சைஸ்ஸில் சிறப்பிதழ்களாக வெளியானது. அதனை நம் ISAME பாரமீட்டிங்க்கு எடுத்துச்சென்று மற்ற ஆளுநர்களுக்கு விநியோகம் செய்து நம் மாவட்டம் 324-B4க்கு பெருமை தேடித்தந்தவர், நம் மாவட்ட ஆளுநர் அரிமா P.L.முருகப்பன் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

நம் ஆளுநர் அரிமா P.L.முருகப்பன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள் மற்றும் அந்த ஆண்டு சங்க இதழ்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த சங்கத் தலைவர் அரிமா AMSG அசோகன் அவர்களுக்கு கோடான கோடி நன்றிகள் உரித்தாகுக. அந்த ஆண்டு நம் சிவகாசி வரலாற்றில் சிறப்பான ஆண்டு பற்பல தலைப்புகள், Quiz-கள் என பல தலைப்புகள் இடம் பெற்று சங்க இதழ்களுக்கு புது இலக்கணம் படைக்கப்பெற்றது. அந்த ஆண்டு சங்கங்களின் பரிசுகளில் முதல் பரிசினை பெற்று நம் சிவகாசி அரிமா சங்கம் சிறப்பு பெற்றது.

என் அரிமா வாழ்வில் சங்கத்தின் Best Bulletin Award பெற்று சிறப்பு பெற்றது என் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றது என்றால் அது மிகையாகாது.

*When Problems come into your life like nonstop rain, remember that your positive attitude will always be your umbrella.*



## அரிமா சங்க இதழாசிரியர் கருத்துக்கள்...

***Lion S.Stalin,*** Editor 1996-97



நமது சிவகாசி அரிமா சங்கம் இன்று 203 உறுப்பினர்களை கொண்டு மாவட்டத்திலேயே அதிக உறுப்பினர்களை கொண்ட சங்கம். பெருமைதான். ஆனால் ஆண்டுதோறும் அத்தனை உறுப்பினர்களையும் ஒன்று இணைத்து, தோழமை, ஒற்றுமை காத்து, சந்தா பெற்று மாதம் தவறாது 3 கூட்டம் நடத்தி, விருந்து படைத்து இடைவிடாத சேவைகள் செய்து, பொது மக்களிடமும், மாவட்டத்திலும் நம் சங்கத்தின் பெயரை ஆண்டுக்கு ஆண்டு உயர்த்த தன் பொன்னான நேரம் பொருள் உழைப்பை தந்து ஆண்டு முழுவதும் தங்களை அர்ப்பணித்து கொண்டிருக்கின்ற முத்தலைவர்களை பாராட்டியே ஆக வேண்டும். வாழ்த்துக்கள்...

முத்தலைவர்களை பாராட்டும்போது, அவர்கள் மாதம் தோறும் நடத்தி முடிக்கும், 2 கூட்டங்களிலும், காலண்டர் ஆப் ஆவன்ஸ் நிகழ்ச்சிகள், சிறப்பு விருந்தினர்களின் கருத்துக்கள், பயனுள்ள முகாம்கள், பசிக்கு உணவு, முதியோர் ஆதரவற்றோர் இல்லம், கல்வி உதவி என தினம் தினம் நடந்து முடிந்த சேவைகளுடன், மாவட்ட செய்திகள் மல்டிபில் மற்றும் அரிமா செய்திகள் பன்னாட்டு நிரந்தர திட்டமான அரிமா பள்ளியின் மாதாந்திர செய்திகள், பயனுள்ள கட்டுரைகள், பிறந்த நாள், திருமண நாள் வாழ்த்துக்கள் என அனைத்தையும் ஒன்று திரட்டி, புகைப்படங்களுடன் சுமார் 56 பக்க செய்திகளையும், 80 பக்கம் விளம்பரங்களையும், பளபளக்கும் ராப்பரில் உள் அடக்கி சங்க இதழை மாதந்தோறும் வெளியிட்டு நமது அனைத்து உறுப்பினர்கள் மட்டுமின்றி மற்ற சங்கங்களும், மாவட்டமும், முன்னாள் ஆளுநர்களும், தெரிந்து கொள்கின்ற வகையில் தினம் தினம் தன்னைத்தானே வருத்தி, உருக்கி, அடித்து, செதுக்கி உருவாக்கித் தரும் ***THE JEWEL***

இதழ் ஆசிரியர்களை பாராட்ட வேண்டியது இன்றியமையாத ஒன்று.

ஆம் 1975 முதல் கடந்த 48 ஆண்டு காலமாக இடைவிடாது தொடர்ந்து இன்று வரை வெற்றி நடைபோட்டு ஆண்டு தோறும் 10 முதல் 12 இதழ்களை வெளியிட்டு மாவட்ட விருதுகளையும், கூட்டு மாவட்ட விருதுகளையும் ஒவ்வொரு ஆண்டும் பெற்று, நமது சங்கத்திற்கும் முத்தலைவர்களுக்கும் பெருமை சேர்த்து தந்து கொண்டிருக்கின்ற சிறப்பு மிகு சங்க இதழ் ஆசிரியர்கள் ஒவ்வொருவரையும் இந்த Bulletin Month இதழில் உங்கள் அனைவரின் சார்பில் வாழ்த்தி மகிழ்கிறேன்.

ஈடு இணையில்லா பல திறமை மிக்கவர்கள் நமது சங்க பெண் அரிமாக்கள் என்பதை பல சூழ்நிலைகளில் நிரூபித்துக் கொண்டிருந்தாலும் 2002ம் ஆண்டு முதல் இன்று வரை நமது சங்க இதழ் ஆசிரியர் பொறுப்பை ஏற்று திறம்பட நடத்தி ஆண்டு தோறும் சாதனையும், விருதுகளையும் பெற்று சங்கத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டிருப்பவர்கள் இவர்கள் வாழ்த்துக்கள்...

எனது இதழ் ஆசிரியர் ஆண்டு 1996-97 நம் சங்க இதழுக்கு மாவட்ட ஆளுநர் விருதும், Multiple Dist. விருதும் கிடைக்க பெற்றோம். அதற்கு எனக்கு உதவிய, ஊக்கப்படுத்திய சங்கத்தலைவர் அரிமா சந்திரபிரகாஷ், செயலாளர் அரிமா ஸ்ரீதருக்கு எனது நன்றியும், வாழ்த்துக்களும். இனி வரும் ஆண்டுகளில் மிக விறு விறுப்பான, சுறு சுறுப்பான நமது சங்க ஆசிரியர் பணியை மீதமுள்ள பெண் அரிமாக்களே தொடர்ந்து ஏற்று நடத்தட்டும், ஆண்டுகள் தோறும் சாதனைகளை பதிக்கட்டும், நாம் படித்து மகிழ்ந்து, பாராட்டுவோம்.

*Life is Similar to Boxing game Defeat is not declared when you "fall down"; Defeat is declared when you refuse to "Get up"*

# சங்க இதழாசிரியராக எனது பயணம்

**Lion K.Sankari Bala**
Editor 2017-18



ஓர் புத்துணர்வோடும், எப்பொழுதும் இதழில் எதை எழுதலாம், எங்கு இருந்து அரிமா விஷயங்களை சேகரிக்கலாம் என்ற நினைவில் ஒரு வருட இதழாசிரியர் பணி இருந்தது. அப்பொழுது தலைவராக இருந்த T.இம்பாலா எனக்கு வலது கரம் போல் உதவினார். இந்த ஒரு வருட கால அனுபவம் எனக்கு தெளிவாக லயன் பள்ளியைப்பற்றி தெரிந்து கொள்ள உதவியது.

மருத்துவக்குறிப்புகள் என்ற பகுதியில் டாக்டர். சுதந்திர கண்ணன் எழுதிய மார்பக புற்று நோய் பற்றிய விழிப்புணர்வு கட்டுரையும், குழந்தைகளுக்கு வரும் புற்றுநோயை எப்படி தடுக்கலாம் என்ற கட்டுரை அனைவராலும் பாராட்டப் பெற்றது.

திருவண்ணாமலையில் நடந்த கூட்டு அரிமா சங்கம் பற்றிய விளக்கமும் அங்கு சென்ற யாத்திரையை பகிர்ந்து கொண்ட விதத்தைப் பற்றி படித்து நேரில் சென்று பார்த்த அனுபவத்தை என் கண்முன் கொண்டு வந்தீர்கள் என்று பாராட்டியது மறக்க முடியாது.

டைப் செட்டிங் என்ற எளிமையான ஒன்றை மிகவும் கடினம் என்ற எண்ணத்துடன் செயல்பட்ட ஒருவரிடம் மாட்டிக் கொண்டு ஒவ்வொரு மாதமும் அதை சவாலாக எடுத்துக் கொண்டு வந்தது ஒரு வெற்றிதான்.

இதழுக்கு கட்டுரையை வாங்க ஒரு சிரமமும் இருக்காது. கேட்ட நாளில் வந்து சேரும். அதிலும் ஆடிட்டர் பரமானந்தம் போன்றவர்கள் கட்டுரையை அழகு மிளிர எழுதி கொடுப்பது மிக அழகு.

மாவட்ட ஆளுநர்கள் நம் இதழை படித்து விமர்சனம் செய்து கடிதம் எழுதும்போது ஏதோ ஒன்றை சாதித்த பெருமிதம் எழும்.

இது ஓர் அழகான பணி. இந்த அழகை அழகாக்க புது புது பரிமாணங்கள் அதிகம் இருக்கிறது. இனி வரவிருக்கும் இதழாசிரியர்களுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்...

## ஆசிரியர்களின் பார்வை (Teacher's Perspective)

ஒரு நல்ல ஆசிரியராக தமது இறுதி காலம் வரை வாழ்ந்து காட்டிய, மாபெரும் தத்துவ மேதையாக விளங்கிய டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5 ஆம் நாளை, ஒவ்வொரு வருடமும் ஆசிரியர் திருநாளாகச் கொண்டாடுகின்றோம். இது நமது சமுதாயத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கும், கல்வியாளர்களை கௌரவிக்கும் ஒரு சிறப்பு நாளாகும்.



குறும்புகளை ரசித்து
குழப்பங்களைத் தீர்த்து
தவறுகளைத் தவிர்த்து
தன்னம்பிக்கை கொடுத்து
தோல்வியை பழக்கி வெற்றிக்கு வழி வகுத்து
பெருமை பேசி தோழமையுடன்
வாழ்த்துவது ஆசிரியரே!

## அரிமா ஆசிரியர் – ஓர் வினா விடை



Lion A.A.மகேசன் அவர்கள் 1982யில் தன்னுடைய ஆசிரியர் பணியைத் தொடங்கினார். 40 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றி தற்போது சிவகாசி காளீஸ்வரி கல்லூரியில், Co-ordinator, Training and Placement Cell-யில் பணிபுரிகின்றார். 1998-ஆம் வருடம் நமது சங்கத்தில் இணைந்தார். 2004-05ஆம் ஆண்டில் நமது சங்க செயலாளராகவும், 2007-08ஆம் ஆண்டில் நமது சங்க தலைவராகவும் பதவி ஏற்று பல சேவைகள் செய்துள்ளார்.

**நமது சங்கத்தில் உங்களை இணைத்துக் கொள்ள உங்களைத் தூண்டியது எது?**

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற் றெல்லாம் தலை” எனும் குறளுக்கு இணங்க

எனது பொருள், அறிவு, நேரம், அனுபவம் போன்றவற்றை தேவையினால் வறியவர்களுக்கு வழங்கவும் உயர்ந்த சிந்தனையாளர்களின் நட்பை பெற வேண்டும் என்ற உவகையே என்னை நமது சங்கத்தில் இணையத் தூண்டியது.

**நமது சங்கத்தில் உள்ள ஈடுபாடு உங்கள் ஆசிரியர் பணிக்கு எவ்வாறு உதவுகிறது?**

புத்தகம், படிப்பு என் வேலை என்று மட்டும் இருந்த என்னை உலகளாவிய செயல்களில் பரிச்சயப்படுத்தி என் மாணவ மாணவியர்களுக்கு நம் இந்திய மண்ணின் வாழ்வியல் நடைமுறைகளை பழக்கிவிட எனக்கு கடைத்த சிறந்த பயிற்சி பட்டறையே நம் சங்கம்.

**ஆசிரியராக உங்கள் பங்கையும் நமது சங்கத்தில் உங்கள் ஈடுபாட்டையும் எவ்வாறு சமநிலைப்படுத்துகிறீர்கள்?**

நெருப்பு ஒளியும், உஷ்ணமும் கொடுக்கிறது. நீர் கலக்கவும் சுத்தப்படுத்தவும் செய்கிறது. மரத்தின் வேர் முதல் கனி வரை நமக்கு விருந்தாகவும் மருந்தாகவும் ஆகிறது. அது போல் சாமானியனான எனது நேர மேலாண்மை தொடர் செயலாக்கம் எண்ண விழிப்புணர்வு ஆகியவற்றால் இவ்விரண்டு மட்டுமல்ல தசாவதானியாகும் முயற்சியிலும் உளமாற ஈடுபடுவதில் மனநிறைவு அடைகிறேன்.

**உங்கள் மாணவர்களை சமூகப் பொறுப்புடன் இருக்கவும் உலகில் மாற்றத்தை ஏற்படுத்தவும் எவ்வாறு ஊக்குவிப்பீர்கள்?**

நம் முன்னோர்களின் வாழ்க்கை வரலாற்றில் நிகழ்ந்த சரித்திர மாற்றங்களையும். வெற்றிச் சிகரங்களையும் அவர்கள் மனதில் பதியுமாறு கூறி மாணவ மாணவியர்களின் சிறுசிறு வெற்றிகள் மற்றும் சாதனைகளை சிறப்பு நிறைந்த சபையில் பாராட்டி, பகிர்ந்து, பதிவு செய்தல் மூலம் அவர்களின் மனங்களில் நேர்மை, அர்ப்பணிப்பு, கழன உழைப்பு, நேரம் தவறாமை போன்ற பொருளுக்கு விதைகளை விதைத்து அவை விருட்சமாக வேரூன்றி வளர சமுதாய விவசாயம் செய்வேன்.

**Lion A.A.மகேசன்** M.Com., M.Phil., Ph.D., M.C.A.,

# Teachers' Day

**Dr.A.Thanga Thirupathi**



Dear Lions

First, I'd like to express my gratitude to Lion Deepalakshmi Sudhakar, editor of the Lions Club of Sivakasi, for giving me the chance to deliver a message for Teacher's Day.

I would like to begin with a quote by Dr. A. P. J. Abdul Kalam," Teaching is a very noble profession that shapes the character, caliber, and future of an individual".

Yes...I'm also doing that prestigious teaching profession with pride. I am Lion Dr. A. Thanga Thirupathi, and I work as a Teacher in the Pharmacy Profession, currently as Professor, Department of Pharmacology, with M.Pharm, Ph.D. qualifications. I have 27 years of academic experience as well as 10 years of administrative experience. In my pharmacy career, I have published 50 national and 15 international research papers, as well as attended 10 national and 5 international conferences. I joined the Lions Club of Sivakasi in March 2009 and served as joint treasurer at most. I actively took part in numerous initiatives, including blood donation camp, health checkup camp, etc. I also joined the Lions Club of Sivakasi in order to experience its camaraderie. Everytime I visit Sivakasi, I make sure to consistently attend all of the Lions club of Sivakasi meetings,interclub meetings as well as RC meetings. I have followed every piece of advice given by Lions, including

1. Honoring senior citizens

2. Reliability

3. Teamwork in service initiatives, along with Time management.

Also insisting to follow all these in the life of my students. I provide motivation, interview tips, etc., for all of my learners in relation to their opportunities for employment and motivating them.

Valuable life skills too like communication, compassion, organization, and presentation.

Concluding with a quote by Phil Collins," By learning you will teach; by teaching you will learn"

It is rightly said never stop learning because life is the teacher which gives us the opportunity to learn new things each and every day. It motivates us to learn and defeat the challenges which we come across. The greatest teacher we could ever have is our LIFE.

Let us learn the lessons that life teaches us everyday and live happily!

Vaazhga Valamudan !

## *BIRTHDAY RIDDLE*

***Today is Newton birthday.***

***A year ago, Newton had five candles and he lit all the candles except the one at the last.***

***Now he is going to light all the candles. How old is Newton Today?***

***Of course, he is not five today.***

***Answer in Page : 54***

# Unveiling Lions School Activities



**Our School's activities from 16th August to 15th September 2023 are as follows. Sports Achievements**

**State Level Excellence :** Outstanding performance of our students in State Level Lawn Tennis, Silambam, Badminton, Yoga and Chess tournament made an impressive feats and got many prizes.

**Zonal Victory Parade :** The School education department conducted various sports tournament at Zonal level and our students proved, they are zonal super stars and secured Numerous Zonal honors in Basket Ball, Food Ball, Chess, Badminton, Table Tennis, Tennikoit, Throw Ball, Hand Ball and various Athletics like, High Jump, Long Jump, relay, Discus throw, Shot put, Hurdles, Javelin throw, Running and Triple Jump.

The school's unwavering support for sports programs, provision of world - class facilities and the guidance of dedicated coaches have created an environment where our students can thrive and excel. This support has not only resulted in personal milestones for our athletes but has also brought numerous accolades and championships to our school.

**Achievements in Extra curricular Activities :** ROTO FEST 2023 competition was organized by NPSSRK Rotary Matriculation Hr. Sec. School, Sivakasi. Our Students proved their Excellence in "Coffee Painting", Flower Vase Making, Fruit & Vegetable Carving & Designing, Nan Kadavul, Mime, Unakkul Oruvan, Villathi Villain and our school won the overall "Winner Trophy".

STARZ 2K23 competition was organized by VSKD Girls Matriculation Hr. Sec. School, Sivakasi, our students got prizes in Story Writing, Latin Squares, Logo Designing and our school won the "Runner Trophy".

They also stagged their talents in, elocution competition and Drawing Competition on the topic "Your Vision on Future India" organized by Life Insurance Corporation of India, Sivakasi.

In the District level Science Exhibition organised by Puthiya Thalaimurai TV & CEO, Virudhunagar on the title "வீட்டுக்கொரு விஞ்ஞானி 2023" our students got IInd Place.

**Functions :** 55th School Day & Parents Day was celebrated in a grand manner at Senior Campus on 26.08.2023, Mr Mu Ramanathan BE was the Chief Guest and Mrs Alamelu Ramanathan was the Guest of Honour, Mr P Pradeepan BSc was the Parent Representative.

The students of Std I to V celebrated the National Sports Day in the junior school on Tuesday, 29th August 2023.

Teachers' Day was celebrated in the junior school on Tuesday, 5th September 2023. Sanjay M and Priya Dharshini J of Std V gave speeches about Dr Radhakrishnan and students of 3 to 5 danced and sang a song.

**Others :** Albendazole Tablet, given by TamilNadu Primary Health Centre was distributed to the students of Pre KG to Std V on Thursday, 17th August 2023.

134 students of Std III and V, 14 teachers and Primary Incharge Mrs B Mercy and Mrs A Keerthiga went on an education tour through buses to Chennai, Vandalur Zoo and Mahabalipuram on 1st and 2nd September 2023.

66 students and 3 teachers of The Sivakasi Lions Play school had a pleasure trip to the senior school on Monday, 11th September 2023. Teachers day was celebrated in a grand manner with Mr T Annamalayan Correspondent, SHN Girls Hr Sec School, Sivakasi as the Chief Guest at Junior campus by our Lions Club of Sivakasi on 13.09.2023 and teachers were honoured with gifts in the function.

*Mr.M.G.PANDIAN M.A., M.Ed., M.Phil.,*
*Principal,*
*The Sivakasi Lions Mat.Hr.Sec.School.*

## ROTO FEST 2023




## Educational Tour





## School Day






## Teachers Day Celebration



# ORGANIZATION AND HISTORY OF LIONS CLUB

**PDG Lion Dr.Adilakshmi Gurumurthy.**




In 1917, Melvin Jones formed an Association of Lions Clubs @ hotel Laselle, Chicago with 22 Delegates, On oct 8th 1917, The first Convention was held at Adolphus Hotel Dallas, Texas and 22 clubs out of 27 clubs attended the convention. The first President was Dr.William P.Woods and 9 Directors were elected, at that time constitution bye-laws and code of ethics were formed. The official colour announced as gold and purple. Melvin Jones was appointed as the action Secretary of the organization.

On Nov 1918 The Lions Club Magazine was published, overall 48 clubs were formed. On March 1920 Lions became International When Lions Club was organized in Canada. On May 1920, The First District Convention within International Association was held. In 1953, Lions International Head quarters was build in Chicago and on 1954 our official Motto "WE SERVE" was adopted.

**Lionism in India :** In 1956, at Bombay the first Lions Club was formed and the Charter President was Noshir N.Pundole (L.C of Bombay). In 1964 Noshir become the first International Director of India. Lioness Clubs in India was formed in 1976 and in 1980, Lioness program with 2500 clubs were formed and it become the No.1 Ladies service organization.

In 1980, UNO honors LCI by observing LCI day, On 1987 the first lady to become a Lion was Dr.Adhilakshmi Gurumurthy of Madurai H and she is the First lady Governor elected from 324 S.I Multiple , and on 2002 Lions Quest program was introduced by L.C.I.



**1992 - 93 :** Lion Rohit.C.Mehta, the first International president from India, Ahmedabad.



**2005 - 06 :** Lion Ashok V.Mehta the Second International President from India 323 A1 Mumbai.



**2017 - 18 :** Lion Naresh Agarwal the third International President from District 321 Delhi.



**2020 - 21 :** Lion.A.P.Singh, from Kolkata recommended for International President and elected to serve as second vice president of Lions Clubs International at the associations 105th International Convention, on July 2023.



## Process of changing "YOUR IDENTITY"

*(Atomic Habits James Clear)*




**Lion Er. N.SIVAPIRAN**



The word identity was originally derived from the Latin words essentitas, which means being, and identidem, which means repeatedly. Your identity is literally your "repeated beingness".

"Your identity emerges out of your habits".

You are not born with present beliefs. Every belief, including those about yourself, is learned and conditioned through experience.

Your habits are how you embody your identity. When you speak every day, you embody the identity of a speaker, when you write each day, you embody the identity of a writer, when you play violin each day, you embody the identity of a musician The more you repeat a behavior, the more you reinforce the identity associated with that behavior. Whatever your identity is right now, you only believe it because you have proof of it. If you go to temple every Friday for fifteen years, you have evidence that you are religious. If you read books for an hour every night, you have evidence that you are a reader. The more evidence you have for a belief, the more strongly you will believe.

For most of my early life, I did not consider myself a speaker. If you were to ask any of school teachers or my college professors, they would tell you I was an average. When I began my speaking career, I present a new topic for the first few years. As the evidence grew, so did my identity as a speaker. I did not start out as a speaker. I became one through my habits. Of course, your habits are not the only actions that influence your identity, but by virtue of their frequency they are usually the most important ones. Each experience in life modifies your self-

image, but it is unlikely you would consider yourself a football player because you kicked a ball once or a musician because you play a music. As you repeat these actions, however, the evidence accumulates and your self-image begins to change.

The effect of one-off experiences tends to fade away while the effects of habits gets reinforced with time, which means your habits contribute most of the evidence that shapes your identity. In this way, the process of building habits is actually the "process of becoming yourself". This is a gradual evaluation; we do not change by snapping our fingers and deciding to be someone entirely new. We change bit by bit, day by day, habit by habit. We are continually undergoing microevolutions of the self.

Every action you take is a vote for the type of person you wish to become. No single instance will transform your beliefs, but as the votes build up, so does the evidence of your new identity. This is one reason why meaningful differences by providing evidence of a new identity. And if a change is meaningful, it actually is big. That is the paradox of making small improvements. Putting this all together, you can see that habits are the path way to changing your identity. The most practical way to change who you are is to change what to do. New identities require new evidence. If you keep casting the same votes you are always cast, you are going to get the same results you are always had. If nothing changes, nothing is going to change. So,

1. Decide the type of person you want to be

2. Prove it to yourself with small wins

Once you have a handle on the type of person you want to be, you can begin taking small steps to reinforce your desired identity.

Your habits change your identity and your identity shapes your habits. It is a two-way process.

ALL THE VERY BEST.

# மூத்த குடிமக்களும் அரிமா சங்கமும்

**Lion Sivashankari Kathiravan**
Editor 2011-2012



உலக மூத்த குடிமக்கள் தினம் ஆகஸ்ட் மாதம் 21 ஆம் நாள் கொண்டாடப்படும் என்று 1988 ஆம் ஆண்டு அன்றைய தலைவர் ரொனால்டு ரீகன் அறிவித்தார். வீட்டிலுள்ள முதியோரை நினைவு கொண்டு அவர்களுக்கு மரியாதை செய்ய இந்நாள் ஒதுக்கப்பட்டது.

நம் இந்திய கலாச்சாரத்தில் மூத்தோரை மதித்தல் என்பது ஓர் அன்றாட நிகழ்வு தம் இரத்தத்தில் ஊறிய ஒன்று! நம் கலாச்சார வழக்கம்!

2000 ஆம் ஆண்டு நாங்கள் அரிமா சங்கத்தில் இணையும் போது என் வயது 30, முதலில் பங்கு கொண்ட சங்க நிகழ்வு லேடீஸ் நைட், வியந்து போனேன்!! ஆடல் – பாடல் போட்டிகள் வயது வித்தியாசமின்றி அனைவரும் பங்கு கொண்டு சிரித்து, மகிழ்ந்த தருணங்களை கண்டு புரிந்து கொண்டேன்

“வயது என்பது ஓர் எண்”, “முதுமையிலும் இளமை.” “உடலுக்கு வயது கூடும், மனதுக்கு முதிர்ச்சி கூடும்” நல்ல எண்ணங்கள் சமூக பொறுப்பு, தொண்டு மனப்பாண்மை நட்பு, சிறந்த வாழ்கை முறை, விளையாட்டு இவையே நம்மை முதுமையிலும் இளமையாக வைத்திருக்கும் பண்புகள்.

நான் மிகவும் மதித்து, நேசித்த அரிமா ஜோதிபாய் ஜெயபால் அவர்களை இன்று நினைவு கூறுகின்றேன். துரோபால் (Throw Ball) ஷட்டில் (Shuttle) வீராங்கனை, 86 வயதிலும் அவர்கள் throwball விளையாட வந்த ஒழுக்கம் விடுமுறை வருகிறது என்று வருத்தப்படுவார். நேர்மறை எண்ணத்தோடு அவர்கள் வாழ்க்கையை எதிர்கொண்ட நேர்த்தி என்றும் எங்கள் எண்ணங்களில் வாழ்கிறீர்கள் அக்கா...!

223 உறுப்பினர்கள் கொண்ட நமது சங்கத்தில் 94 பேர் அகவை 60ஐ தாண்டியவர்கள், ஆனால் இன்னும் இளமையுடன் துள்ளிக்குதிக்கும் இவர்களை அரசு சான்றுபடி மட்டும், மூத்த

குடிமக்கள் என்று எண்ணுகிறோம். அறிவுக்கூர்மை, அனுபவம், தொழில், நேர்மை, சமூகப் பொறுப்பு ஆகியவற்றுடன் நீங்கள் அரிமா சங்கத்திற்காக ஆற்றும் சேவைகளை நாங்கள் பாராட்டுகிறோம் – உங்கள் அறிவுரைகளுக்கு நன்றி கூறுகிறோம்.

“நீங்கள் நம் அரிமா சங்கத்தின் தூண்கள்

தாங்கிப்பிடிக்கும் ஆலமர விழுதுகள் !!”

விழுதுகள் நீங்கள் என்றால் அதன் ஆணிவேர், நம் மிக மூத்த குடிமக்களான 80 வயதை தாண்டிய நமது உறுப்பினர்கள் 11 பேர்.

நம் சங்கத்தின் பட்டயப் பொருளானர் முன்னாள் ஆளுநர் அரிமா A.வைரப்பிரகாசம் MJF, இன்னும் நம் சங்கத்தை அறவழியில் வழிநடத்திச் செல்லும் கலங்கரை விளக்கு.. அவருடன் கை கோர்த்து, தோள் கொடுத்து என்றும் எங்களை இன்முகத்துடன் இன்சொற்களால் ஊக்கப்படுத்தும் அரிமா மீரா வைரப்பிரகாசம் MJF நம் சங்கத்திற்கு இறைவன் அளித்த வைரங்கள். அரிமா என்பது இவர்களின் “உயிர்மூச்சு”.

அரிமா K.A.P.A.ராஜசேகரன் அவர்கள், அமைதியான சொற்கள் பேசுபவர் பல பொறுப்புகளை வகித்துக் கொண்ட ஒரு சிறந்த தலைவர். அவரின் துணைவி அரிமா அமர்ஜோதி ராஜசேகரன் ஒரு சிறந்த பாடகி, விளையாட்டு வீராங்கனை, எழுத்தாளர், கவிஞர் இளம் அரிமாக்களுக்கு ஒரு வழிகாட்டி. இன்றும் இவர்கள் நமது சங்கத்தின் அனைத்து அரிமா கூட்டத்திற்கு நேரம் தவறாமல் உற்சாகமாக பங்கேற்பவர்கள்.

அரிமா T.D.ராஜேந்திரன் அவர்களை மூத்த குடிமகன் என்று கூறவே தயக்கமாக உள்ளது. இன்னும் துடிப்பான இளைஞன் போல் மாவட்டம் கடந்து மாரத்தான். போட்டிகளில் பங்கேற்று நம் சிவகாசியின் பெருமையை பறைசாற்றும் சிறந்த சிவனடியார். உலக தாய்ப்பால் விழிப்புணர்வு தினத்தன்று சிவகாசியில் நடைபெற்ற மாரத்தான் போட்டியில் பங்கேற்று 5.75 கி.மீட்டரை, 59 நிமிடம் 57 விநாடிகளில் கடந்து முடித்தார், 2016யில் சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசிய மாரத்தான் போட்டியில் முதலிடம் பெற்று நமது நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

நாடு கடந்து உலக அளவில் வெற்றி பெற்றவர் உலக நாயகன் அரிமா T.D.ராஜேந்திரன் அவர்கள் அமைச்சரவை பொருளாரளராக இருந்து நம் சங்கத்திற்கு பெருமை சேர்த்தவர் முன்னாள் தலைவர், சிவகாசியின் முன்னோடி ஆடிட்டர் அரிமா S.சந்திரசேகரன், ஆர்ப்பாட்டமின்றி தன் கடமையை சிறப்பாக செய்யும் கர்மவீரர். அரிமா K.S.S.P.தனசேகரன் அவர்கள் ஓர் சிறந்த அரிமா தலைவர் மட்டுமின்றி பள்ளி தாளாளராகவும் கல்வித்துறையில் தன் சேவையை வழங்கியுள்ளார். தன் இன்சொற்களால் அனைவரையும் வழி நடத்திய பண்பாளர்.

அரிமா C.கனகசபை தோற்றத்தில் உயர்ந்தவர், குணத்திலும் சேவை மனப்பான்மையிலும் அதைவிட உயர்ந்தவர். நம் சங்கத்தின் முன்னாள் அமைச்சரவை செயலாளர். இன்றும் ஓர் சிறந்த அரிமா வழிகாட்டியாக விளங்குபவர். நமது அனைத்து அரிமா சங்க கூட்டத்தில் பங்கேற்பவர்.

நம் சங்கத்தின் "கர்மவீரர் காமராஜர்", "காதி அணிந்த காந்தி" முன்னாள் தலைவர் அரிமா S.சேர்மத்துரை, சிரித்த முகம், நேர் கொண்ட பார்வை, கடமை தவறாத ஓர் காந்திய வாதி

ஆர்ப்பாட்டமின்றி தம் அரிமா கடமைகளை ஆற்றும் அரிமா P.C.பாலகிருஷ்ணன் அவர்களின் மனிதாபிமான சேவைகளை பாராட்டுகின்றோம்.

அரிமா சாவித்திரி தேவி குருசாமி அவர்கள் ஓர் சிறந்த எழுத்தாளர், கவிஞர், பாடகி, பேச்சாளர் விளையாட்டு வீராங்கனை. இளைய அரிமாக்களுக்கு ஒரு முன் உதாரணமாக இருப்பவர் அரிமா கூட்டத்திற்கு இவர் வராத நாட்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். சேவைத் திட்டங்களாகட்டும், நாட்டுநடப்பாகட்டும், தன் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துரைக்கும் அறிவாளி.

நமது அரிமா சங்கத்தில் நமது மூத்த குடிமக்களின் மதிப்புமிக்க பங்களிப்பும் அவர்களின் ஆலோசனையும் நமது அரிமா சங்கத்தை மென்மேலும் வளரச் செய்து பல சாதனைகள் புரிய வழிவகுக்கும். என்றும் இவர்களை தலைவணங்கி, மரியாதையையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# Birthday Wishes

*The years keep flowing on and as they do,*
*they only pause to smile back at you.*
*And if you give freely to all you meet,*
*the wisdom that makes your life is totally complete,*
*You'll never grow old, For you've so much to give,*
*and you'll always be young, for you've learned how to live..*



Lion Vathsala Dhanasekaran
01.09.1948



Lion Hemalatha Anantharajan
02.09.1974



Lion Hema Subasingh
04.09.1948



Lion A.Asaithambi
06.09.1952



Lion Dr.A.Ramanathan
06.09.1965



Lion VID.Amalanand
09.09.1973



Lion S.Vithyatharan
15.09.1954



Lion Renuga Devi
15.09.1973



Lion Nalini Ashokan MJF
25.09.1963



Lion Mehala Sanjeevi Babu
23.09.1970



Lion Sivasankari Kathiravan
29.09.1971



Lion K.Muraliraj
23.09.1977





Lion Geetha Sureshkani
29.09.1980



Lion M.S.Baskaran
30.09.1968



# Wedding Anniversary Wishes

*Extra pair of eyes - to see your future clearly*
*Stick of gum - so you stick together*
*Plaster - to make things better for each other*
*Tea cup - find the time to relax together*
*Seeds - to help your love grow stronger every day*
*Tissue - to wipe away tears good or bad*
*Glitter - to help you keep the sparkle*
*Jigsaw piece - you fit together so well*
*Matchstick - you are the perfect match*
*Rubber band - to keep on flexibility*
*Candle - for a bright future together*
*Love hearts - to wish you live a long life together...*

| | |
|---|---|
| Lion AMSG.Ramamoorthy MJF - Lion R.Premalatha | 01.09.1977 |
| Lion M.Muralikrishnan - Lion M.Nava Jyothi | 01.09.2004 |
| Lion P.S.C.D.Vijayan - V.Jeya | 02.09.1970 |
| Lion K.M.N.Ravi Rajan - Lion Murugeswari | 04.09.1991 |
| Lion S.Balasubramaniyan - Lion B.Premalatha | 05.09.1976 |
| Lion S.Stalin - Lion S.Mala | 06.09.1978 |
| Lion M.Ramamoorthy - R.Bhavani | 07.09.1975 |
| Lion G.Sivasakthi Balan - Lion S.Bhuvaneshwari | 09.09.2002 |
| Lion A.P.Selvarajan MJF - Lion S.Mallika | 10.09.1972 |
| Lion Dr.S.V.Haymenth - Lion Dr.Deeptha Mathi | 10.09.2021 |
| Lion S.Selvaraj - Lion S.Subashini | 11.09.2002 |
| Lion C.Rajagraham - R.Uma | 12.09.1991 |
| Lion S.Sermathurai - S.Jeya Selvi | 14.09.1973 |
| Lion A.Ravi - Lion R.Murugeswari | 14.09.1986 |
| Lion S.Radhakrishnan - R.Maheswari | 14.09.1984 |

**Answer : 31**
**Newton was lighting the candles in binary i.e.**
**11110 = 30 ; 11111 = 31**



**Lion Deepa Arunkumar**
**Greeter Committee Chairperson 2023-24**

# வாழ்த்துரை



சிவகாசி அரிமா சங்கம் 23-24ம் ஆண்டு முதல் இதழ் வாசித்து ரசித்து மகிழ்ந்தேன். ஒரு சங்க இதழ் அரிமாக்களின் கருத்துக்கள் பொதிந்த பெட்டகம் பலருடன் சங்கமிக்க ஒரு பாலம். சங்க நிலையை பிரதிபலிக்கும் கண்ணாடி இப்படி பல்வேறு முறைகளில் இதழில் உருவகிக்கலாம். உங்களது படைப்பு அனைத்து நிகழ்வுகளையும் முழுமைப்படுத்தியிருக்கிறது.

கூட்டுகூட்டம் நடத்திட எங்கள் தூத்துக்குடி அரிமா சங்கத்தை தேர்ந்தெடுத்து சங்கத்தைப் பற்றிய ஒரு சிறு குறிப்பும் தந்தது எனக்கு பெருமிதம்.

அட்டைப்படம் வரலாற்று படைப்பு முதல் படத்தில் முன்னாள் ஆளுநர் தாமோதரராவ் அருகில் இருப்பது நான் படித்த விருதுநகர் கல்லூரியின் முதல்வர். எனக்கு பழைய நினைவுகளில் நெகிழ்ந்த அனுபவத்தை தந்தது.

பசிக்கு உணவு படிக்க கல்வியும் தந்த பெருந்தலைவர் பற்றிய செய்திகள் - அவர் மாநாடுகளில் இருந்து பல பள்ளிகளுக்கு உதவியது போல நம் அரிமாக்களும் மாவட்ட மண்டல சந்திப்புகளில் பல சேவைகள் செய்யலாம் என்று அறிவுறுத்தியது.

சங்கத்தின் பொறுப்பேற்கும் கூட்டம் - முதல் பொதுக்குழு கூட்டம் இரண்டிலும் நேரில் கலந்து கொண்ட உணர்வு எனக்கு மட்டுமல்ல - எல்லாருக்கும். பன்னாட்டு செய்திகளில் World Central Kitchan பற்றிய செய்தி இதயத்தை தொட்டது.

லத்தின் - ஜெர்மனி மொழிகளில் மில்லியன் என்ற வார்த்தையே கிடையாது. ஏனெனில் அந்த எண்ணுக்கு எதுவும் இருக்காது என்ற எண்ணம் அவர்களுக்கு. ஆனால் உங்கள் சங்கத்தின் அரிமா A.P.செல்வராஜ் அவர்களின் Blood Component Separator உங்கள் பள்ளியில் விழா அரங்கம் அனைத்துமே பல மில்லியன்களைத் தாண்டி இருப்பதை காண்பது கண்டு பெருமிதமான உணர்வு.

மொத்தத்தில் மலர் நட்பு விரிந்து - மனித நேயம் மலர்ந்து இயக்கத்தின் கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்றே கருவாக இருப்பது கண்டு நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளும் - பாராட்டுகளும்.

**MJF Lion Dr.P.N.கதிரேசன்**

# வாழ்த்துரை



இதயம் நிறை அன்பு கொண்ட இதழாசிரியர் தீபலக்ஷ்மி சுதாகரன் அவர்களுக்கு நாகர்கோவில் பிடிஜி. லயன் டாக்டர். எஸ்.ஆர் - ன் வணக்கம்.

அட்டைப்படம் உங்கள் சங்க கம்பீரம் மட்டுமல்ல நம் மாவட்டத்திற்கும் கம்பீரம். "The art of giving by Mrs. Sadhana & Organ donation Pass on the gift of life by Lion Dr.Deepthamathi இந்த இதழின் மகுடங்கள்"

Mission 1.5 வை துவக்கியுள்ள விதமும் அதனை சிறப்பாக Lion Vinoth Kanna விளக்கியுள்ள விதமும் பாராட்டிற்குரியது. School Report நயம். Cabinet Installation, PST Schooling, DC Orientation நிகழ்வுகளை முறையே லயன்கள் சுதாகரன், நாகராஜன், பிரபாகரன், புகைப்படங்களுடன் கச்சிதமாக தந்துள்ளனர். Rebus Puzzle மூளைக்கு நல்ல வேலை கொடுக்கிறது. பிறந்த நாள் மணநாள் லயன்ஸ்களை உங்களோடு நானும் வாழ்த்துகின்றேன்.

இன்பமாய் வாழ வழி செய்யும் யாருக்கு உதவ வேண்டும் இன்னொரு நயம். லயன் அமர்ஜோதியின் கவிதை கருத்தாழமிக்கது. சுதந்திர தின நிகழ்வை சுதிர் ராஜா பாங்குடன் பகிர்ந்துள்ளார். Inter Club Meetingமும் அவ்வண்ணமே Lion பிரேமலதா வாசியப்பன் லயன் தலைமையில் சங்கம் அள்ளிய பரிசுகளுக்கு தனிப்பாராட்டுக்கள்...

International Presidents Message, Pride Stories of Lions International Cub program அருமையான தகவல்கள்...

லயன் ரேணுகா, பவானி சுதிர்களைக் கொண்டு சங்க மீட்டிங்களையும் விளக்கியுள்ளது பாராட்டுதலுக்குள்ளது.

முத்தலைவர்கள் செயலால் வரலாறு படைக்கின்றனர்கள். உங்கள் report... Discover the joy of giving... நறுக்கென உள்ளது. எவ்வளவு செய்திகள்... அத்தனையும் தங்கமாய் ஜொலிக்கிறது.

வாழ்த்துவது, வாயல்ல இதயம்.

இப்படிக்கு,

நாகர்கோவில் டாக்டர். எஸ்.ஆர்.எம்பிபிஎஸ்., டி.லிட்.,

(சமூக சேவைக்காக)